DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU</u>**

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 09 of 2020 PW : 5

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திரு. ராமமூர்த்தி

Father's Name : திரு. சுப்பிரமணி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 35

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.07.2026.

**தேதி.03.07.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 09/2020, அ.த.சா.5 .திரு. ராமமூர்த்தி த/பெ. திரு. சுப்பிரமணி வயது 35 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்**

முதல் விசாரணை

நான் தற்போது ஆர்.கே.பேட்டை காவல் நிலையத்தில் தனிப்பிரிவு தலைமைக் காவலராக பணிசெய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி ராஜசேகர், எதிரி மதன் இவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அவைகள் அ.த.சா.ஆ 5 மற்றும் அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் ஆஜர் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றிய சொத்துக்களுக்கு காவல் ஆய்வாளர் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அவைகள் அ.த.சா.ஆ 7 மற்றும் அ.த.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கையொப்பங்களை நான் ஆர்.கே.பேட்டை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக 2019 ஆம் ஆண்டு பணியாற்றிய போது நானும் முதல் நிலை காவலர் பாலாஜி என்பவரும் ஆய்வாளருக்கு உதவியாக கோனேரி பேருந்து நிறுத்தம் அருகே 01.10.2019 அன்று சுமார் மதிய வேலையில் வாகனங்களை தணிக்கை செய்துகொண்டிருந்தபோது பொன்னையில் இருந்து சோளிங்கர் நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் எங்களை கண்டதும் வாகனத்தை கீழே போட்டு விட்டு தப்பிக்க பார்த்தவர்களை காவல் ஆய்வாளர் மற்றும் நாங்கள் பிடித்து விசாரித்ததில் பந்தி குப்பம் கிராமத்தில் ஒரு வயதான நபரிடம் இருந்து தாலி செயினை இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பு பறித்ததாகவும் , திருட்டு நகையை வைத்திருந்தால் போலிசார் பிடித்துவிடுவார்கள் என்று அதனை மாற்றுவதற்காக சோளிங்கர் செல்வதாக கூறியிருந்தார்கள். அவர்கள் கூறியதை

ஒப்புதல் வாக்குமூலமாக பதிவு செய்து அதனடிப்படையில் அவர்கள் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தையும் எதிரி ராஜசேகரிடம் இருந்து 5 சவரன் தங்க செயினையும் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் ஆய்வாளர் தயார் செய்தார். அதில் நானும் என்னுடன் வந்த பாலாஜி என்பவரும் கையொப்பம் செய்தோம். அன்றைய தினம் ஆய்வாளர் கைது செய்த நபர்கள் தான்ஆஜர் எதிரிகள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் மற்றும் தங்க செயின் 5 சவரன் உள்ளது தான் எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றியதாகும். பின்னர் எதிரிகள் மற்றும் தடயங்களுடன் காவல் நிலையம் சென்று எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் எங்களை விசாரணை செய்தார்.

**<u>2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் புகார்தாரர், புகார் கொடுத்த நாள் எனக்கு ஞாபகமில்லை. புகார் கொடுத்த அன்றே எதிரிகளிடம் இருந்து பொருட்களை கைப்பற்றவில்லை என்றும் சில நாட்கள் கழித்து தான் கைப்பற்றினோம் என்றால் சரிதான். புகார் கொடுத்த நபர் யார் என்றால் எனக்கு தெரியாது. ஆய்வாளருக்கு தான் தெரியும். இவ்வழக்கில் புகாரின் முழுவிவரம் எனக்கு தெரியாது என்றாலும் ஆய்வாளருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். நான், காவல் ஆய்வாளர் மற்றும் பாலாஜி ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்றதற்கான பொது நாட்குறிப்பேடு இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் புலன் விசாரரணை அதிகாரிக்கு தான் தெரியும். எதிரிகள் வந்ததாக நான் கூறியுள்ள வாகனங்களின் பதிவெண்கள் குறித்து போலிசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய 161 வாக்குமூலத்தில் யார் வாகனத்தை ஓட்டிவந்தார்கள் என்றும் யார் பின்புறமாக அமர்ந்து

வந்தார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள ஆவணங்களில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்ற முழுவிவரத்தையும் என்னால் கூற இயலாது என்றால் கூறஇயலும். நான் குற்ற எண் குறிப்பிட்டுள்ள ஆவணத்தில் கையொப்பம் செய்தேனா அல்லது எழுதாத ஆவணத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் எழுதி வைத்திருந்த ஆவணத்தில்தான் நான் கையொப்பம் செய்தேன். கைப்பற்றிய வாகனத்தின் பதிவு எண் எனக்கு ஞாபகமில்லை. வாகனத்தை எத்தனை மணிக்கு பிடித்தோம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. கைப்பற்றுதல் மகசரில் என்ன சட்டப்பிரிவுகளின் கீழ் வாகனம் கைப்பற்றப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். வாகனத்தை கைப்பற்றும்போது யாரிடம் இருந்து எந்த வாகனத்தை காவல் ஆய்வாளர் கைப்பற்றினார் என்பதும் எனக்கு தெரியாது என்றால் தெரியும். சம்பவ இடமான தேசியநெடுஞ்சாலை போக்குவரத்து நெரிசலான இடம் என்றால் சரிதான். அந்த இடத்தில் கடைகள் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த கடைகளில் இருந்த நபர்கள் யாரையும் சாட்சியாக இருக்க கேட்டு கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அந்த கடையில் இருந்த நபர்களிடம் இவ்வழக்கில் எதிரிகளிடம் இருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக இருக்க காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டிருந்தால் அவர்கள் சாட்சியாக கையொப்பம் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. பொது மக்கள் சாட்சியாக கையொப்பம் செய்திருப்பார்கள் என்றும் நாங்கள் பொய்யாக வழக்கு தாக்கல் செய்ய எதிரிகள் மீது வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. கைப்பற்றிய வாகனங்களின் விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகனத்தை கைப்பற்றும்போது தான் நகைகளை கைப்பற்றினோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மகசரில் 7 வது

விவரத்தின் வாகனத்தை பற்றிய குறிப்பு மட்டும் தான் உள்ளது என்றும் நகையை பற்றிய குறிப்பு இல்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் உள்ள விவரங்களை யார் எழுதினார் என்றால் காவல் ஆய்வாளர் எழுதினார். கைப்பற்றதல் மகசரில் குற்ற எண் காவல் நிலையத்தில் தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு உண்மையாக இருக்கும் பட்சத்தில் பொதுமக்களிடம் சாட்சி கையொப்பங்கள் பெற்றிருப்பார்கள் என்றும் பொய் வழக்கு என்பதால் தான் அவ்வாறு பெறப்படவில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலங்களை எத்தனை மணிக்கு பதிவு செய்தார் என்றால் நேரம் ஞாபகமில்லை. வழக்கு குறித்த எந்த விவரங்களும் எனக்கு ஞாபகமில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலங்களை யார் வாங்கினார் என்றால் காவல் ஆய்வாளர். மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களை யார் எழுதினார் என்றால் காவல் ஆய்வாளரே அவரது கைப்பட எழுதினார். நான் கூறுவது பொய் என்றும் காவல் நிலையத்தில் வைத்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல தட்டச்சு செய்திருந்தால் அது தவறு. நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் எதிரிகள் மீது போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**1 – ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

2 ஆம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை – இல்லை.**

ஒப்பம் – K. வெங்டேசன், B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்

பள்ளிப்பட்டு(FAC)